**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.15/2023
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : பிரம்மநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of September 2023.

04.09.2023

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 29.08.2022ம் தேதி காலை 06.00 மணியளவில் உடையூர் பக்கத்தில் உள்ள விலக்கில் நடந்த விபத்து தொடர்பாக கீழத்தூவல் போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அருகில் காட்டில் வேலை செய்துகொண்டிருந்த என்னிடமும், அமலோபவம் என்பவரிடமும் கையொப்பம் கேட்டார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எழுதப்படாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம்

வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு கையொப்பம் செய்தேன். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.